ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2184/41 - 2020 ජූලි මස 17 වැනි සිකුරාදා - 2020.07.17
2184/41 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2018, செத்தெம்பர் 21 ஆந் திகதிய 2089/49 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) பிரசுரிக்கப்பட்ட 2018.09.19 ஆந் திகதிய மற்றும் 219 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம்(அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு அரசின் சார்பில் அச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) ஆம் பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப் பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட முழுக்காணித் துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.*

எஸ்.எம். சந்திரசேன,
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர்.

எனது இல : 4-3/ 11/2016/UDA/338.
பிரதேச செலாளரின் இல. : කඩු/ඉඩම/03/136/යූඩීඒ.
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு,
“மிஹிகத்த மெதுர”, காணிச் செயலகம், இல. 1200/6,
ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,
2020, யூலை 15.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கடுவெல பிரதேச செயலாளர் பிரிவில், கங்கவத்த 476ஏ- மாலம்பே மேற்கு கிராம அலுவர் பிரிவில் மாலம்பே (கடுவெல மாநகர சபை எல்லையினுள்) கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2017.12.11 ஆம் திகதிய CO/DSO/2017/726 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்ட எல்லைகளுள் அமைந்த காணித்துண்டு:

**1. துண்டு இல. 04 - கலபடகும்புர - விஸ்தீரணம் : சுமார் 0.3791 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 02 மற்றும் கொடெல்லவத்தை வீதியின் வரிமதிப்பீட்டு இலக்கம் கண்டுபிடிக்க முடியாத காணி ; கிழக்கு : கொடெல்லவத்தை வீதியின் வரிமதிப்பீட்டு இலக்கம் கண்டுபிடிக்க முடியாத காணி , தனியார் வீதி மற்றும் கொடெல்லவத்தை வீதி; தெற்கு: கொடெல்லவத்தை வீதி மற்றும் கொடெல்லவத்தை வீதியின் வரிமதிப்பீட்டு இல. 480/2 ஐ கொண்ட காணி ; மேற்கு: துண்டு இல. 5 மற்றும் 2.

*07-833*